# வள்ளுவன் தமிழ் மையம்

## செய்தி மடல் - ஏப்ரல் 2023

### வள்ளுவன் தமிழ் பள்ளியின் பெற்றோர் பிரதிநிதி திருமதி ஈஸ்வரி அவர்களின் செய்தி மடல் வெளியீட்டுச் செய்தி:

அனைவருக்கும் வணக்கம். எனது பெயர் ஈஸ்வரி. நான் வள்ளுவன் தமிழ் மையத்தின் நிர்வாகக் குழுவில் பெற்றோர் பிரதிநிதியாக உள்ளேன்.

வள்ளுவன் தமிழ் மையத்தின் சீரிய குறிக்கோள் இங்கு வரும் ஒவ்வொரு மாணாக்கர்களையும் தமிழ்க்கல்வி கேள்விகளில் மட்டுமல்லாது நமது கலாச்சாரத்தின் தூதுவர்களாகவும் உருவாக்குவதுதான். நம் தமிழின் பாரம்பரியம் அளப்பரியது. அதனை நமது அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வது நம் அனைவரது கடமையாகும். அந்த கடமையைச் செவ்வனே செய்ய வள்ளுவன் தமிழ் மையம் நல்லதொரு மேடையை அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த வருடத்தில் நம் மையம் மாணவர்கள் தமிழின் ஆழத்தை அறிந்து கொள்ளுமாறு தமிழ்க்கண்காட்சி, கோலம் மற்றும் சித்திரப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பாட்டுப் போட்டி, மற்றும் பல போட்டிகளை நடத்தியது. பெரும்பான்மையான குழந்தைகள் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். மேலும், இந்த வருடத்தில் மிகப் பிரம்மாண்டமாக பள்ளியின் ஆண்டு விழாவை நடத்த திட்டமிட்டு வருகிறோம். அதிகமான எண்ணிக்கையில் தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள். நம் பள்ளி மென்மேலும் வளரும்படி பெற்றோர்கள் தன்னார்வலர் பணிக்குத் தங்களது நேரத்தை அளித்து நம் மாணவர்களைத் தமிழ்ச் சமுதாயத்தின் வருங்காலத் தூண்களாக்க முன்வரும்படி நிர்வாகக் குழுவின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.



இதன் காணொளியைப் பார்க்க:

---

### வள்ளுவன் தமிழ் பள்ளியின் நிறுவனர் மற்றும் ஆசிரியர் திரு. வேல்முருகன் அவர்களுடன் ஒரு நேர்காணல்:

**கேள்வி:** உங்களைப் பற்றி சொல்லுங்கள்? உங்களுடைய சொந்த ஊர் எது? எங்கு படித்தீர்கள்?
**பதில்:** வணக்கம் என்னுடைய பெயர் வேல்முருகன். நான் பிறந்த ஊர் விருதுநகர். நான் பள்ளிப்படிப்பு படித்தது நாமனூர் என்ற கிராமம். பின்னர் மதுரையில் படித்தேன். கல்லூரி படிப்பு படித்தது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கீழக்கரை என்ற கல்லூரி. கடந்த **25** ஆண்டுகளாக அமெரிக்காவில் இருக்கிறேன்.

**கேள்வி:** இந்த கற்பித்தல் பயணத்தில் உங்களுடைய மறக்க முடியாத அனுபவம் எது?
**பதில்:** மறக்க முடியாத அனுபவம் என்று எதுவும் இல்லை. ஏனென்றால் எல்லாமே மறக்க முடியாத அனுபவங்கள் தான். முதன் முதலில் ஒரு நூலகத்தில் வகுப்பு நடத்தினோம். பிறகு எனது வீட்டின் அடித்தளத்தில் வகுப்பு நடந்தது. பின்னர் நிறைய நூலகங்களில் வகுப்புகள் நடத்தினோம். பள்ளி என்று ஆரம்பித்தது, முதன் முதலில் ராக்கி ரன் மிடில் ஸ்கூல். ஆரம்பத்தில் **10** மாணவர்களை வைத்து தொடங்கிய பள்ளிக்கூடம் இன்று **600** மாணவர்களாக உயர்ந்திருப்பதில் மிக்க மகிழ்ச்சி.

**கேள்வி:** உங்களுக்கு எப்படி கற்பிக்கும் ஆர்வம் வந்தது?
**பதில்:** முதன்முதலில் என்னுடைய பொண்ணுக்கு தமிழ் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தேன். அதன் பின்னர் என் நண்பர் கிரி சொன்னார் இந்த மாதிரி கொஞ்சம் பிள்ளைகள் எல்லாம் சேர்த்து ஒரு நூலகத்தில் போய் நாம் சொல்லிக் கொடுப்போம் என்று. பிறகு எனது வீட்டின் அடித்தளத்தில் எனது நண்பர்களுடன் நான்கு வகுப்புகளாக பிரித்து தமிழ் கற்பிக்க ஆரம்பித்தோம். அப்படி தொடங்கிய பள்ளி இப்பொழுது இவ்வளவு பெரிய பள்ளியாக வளர்ந்துள்ளது.

**கேள்வி:** இந்த தமிழ் பள்ளி வளர்ச்சி பற்றி உங்கள் கருத்து என்ன?
**பதில்:** இந்தப் பள்ளி இவ்வளவு பெரியதாக வளர்ந்திருக்கிறது. இதற்கு மேலும் நன்றாக வளர வேண்டும் என்றால் மாணவர்களாகிய நீங்கள் எல்லாம் ஆசிரியர்களாக இருக்கணும். நிறைய மற்ற மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கணும். நீங்கள்தான் இந்தப் பள்ளியை அடுத்தடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதுதான் எனது முதல் குறிக்கோள்.

**கேள்வி:** உங்கள் வீட்டிலிருந்த இந்தத் தமிழ்ப் பள்ளியை விரிவுபடுத்த நினைத்த போது நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் என்ன?
**பதில்:** தன்னார்வலர்களை ஒன்று சேர்ப்பது தான் மிகப்பெரிய சவால். அவர்கள் எந்தவித பலனையும் எதிர்பார்க்காமல் தமிழுக்காகவும், அடுத்த தலைமுறைக்காகவும் தங்களது நேரத்தையும் உழைப்பையும் இந்த பள்ளிக்காக கொடுக்கின்றனர். கடந்த **12** வருடமாக தமிழ் பள்ளி நடந்து கொண்டிருக்கிற வேளையில் சில தன்ஆர்வலர்கள் தமிழ் பள்ளி தொடங்கிய நாள் முதல் இன்று வரை ஆசிரியர்களாகவும், வேறு பணிகளிலும் உதவி செய்து வந்துள்ளார்கள். அவர்களது குழந்தைகள் இந்த பள்ளியில் படிக்காவிட்டாலும் அவர்களது உழைப்பை இந்த பள்ளிக்காக கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எங்களது வேண்டுகோள் நிறைய தன் ஆர்வலர்கள் தங்களது நேரத்தை செலவழித்து நமது அடுத்த தலைமுறைக்கு தமிழ் சொல்லிக் கொடுக்க முன் வர வேண்டும்.



இதன் காணொளியைப் பார்க்க:

**கேள்வி:** உங்கள் அனுபவத்திலிருந்து, மாணவர்கள் தமிழ் மொழியில் அதிக ஆர்வம் காட்ட சில பரிந்துரைகள் சொல்லுங்கள்?
**பதில்:** ஒவ்வொருவருக்கும் ஒரு அடையாளம் உண்டு. நமக்கு ஒரு அடையாளம் என்பது நாம் தமிழர்கள் என்பது. அடுத்து நாம் தமிழை பிழையில்லாமல் பேச வேண்டும். வீட்டில் முடிந்த அளவு தமிழில் பேசிப் பழக வேண்டும். தமிழில் பேசுவது என்பது மிகவும் முக்கியம். நீங்கள் பள்ளிப்படிப்பை முடித்த பிறகு, நீங்கள் கற்றுக்கொண்ட தமிழை பிறருக்கு சொல்லிக் கொடுப்பது, தமிழ் படம் பார்ப்பது, பாட்டு கேட்பது, சிறிய கதைகள் படிப்பது, தமிழ் தெரியாதவருக்கு தமிழ் கற்றுக் கொடுப்பது என்பதின் மூலம் நாம் தமிழை மறக்காமல் இருப்பது மட்டுமல்லாமல், அதன் மீது ஆர்வமும் அதிகமாக வளரும்.

**கேள்வி:** நீங்கள் பெற்ற அனுபவங்களிலிருந்து, புதிதாகத் தொடங்கும் ஆசிரியர்களுக்கு சில ஆலோசனைகள் சொல்லுங்கள்?
**பதில்:** எனது பெற்றோர்கள் ஆசிரியர்கள். நான் தொழில் முறையில் ஆசிரியர் இல்லை ஆனால் எங்களுக்கு தெரிந்த தமிழ் கல்வி அறிவுடன் தமிழ் கற்பிக்கிறோம். ஆசிரியர்கள், மாணவர்களின் மனநிலையை புரிந்து அவர்களுக்கு ஏற்றவாறு கற்றுக் கொடுக்க வேண்டும். ஒரு வகுப்பில் எல்லா நிலை மாணவர்களும் இருப்பார்கள். அதனால் அவர்களுக்கு ஏற்றவாறு நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். வகுப்பில் கதைகள் மூலமாகவும் விளையாட்டுக்கள் மூலமாகவும் பாடங்களை சொல்லிக் கொடுக்க முயற்சிக்கலாம் இப்படி செய்யும் பொழுது தமிழ் வகுப்பை சுவாரஸ்யமான கொண்டு போகலாம்.

*- தொகுத்து வழங்கியவர்கள் செல்வி மீனாள் நாகப்பன் மற்றும் செல்வன் டோனி (நிலை - 7 அல்லி மாணவிகள்)*

---

**வரும் நிகழ்வுகள்**

**ஆசிரியர்கள் பங்கேற்கும் விவாதகளம் & போட்டி வெற்றியாளர்கள் பரிசளிப்பு விழா**

**- 05/21/2023 (இராக்கி ரன் இடைநிலை பள்ளி)**

# மாணவர்களின் படைப்புகள்

















## விடுகதைகள்

1. வெட்டிக் கொள்வான் ஆனாலும் ஒட்டிக் கொள்வான், அவன் யார்?
2. ஒளி கொடுக்கும், விளக்கு அல்ல; சூடு கொடுக்கும், தீ அல்ல; பளபளக்கும், தங்கம் அல்ல அது என்ன?
3. ஒன்று போனால் மற்றொன்று வாழாது, அவன் யார்?
4. உங்களுக்கு சொந்தமான ஒன்று ஆனால் உங்களை விட மற்றவர்களே அதிகம் உபயோகிப்பார்கள், அது என்ன?
5. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான், அவன் யார்?
6. அமைதியாக இருப்பான் ஆனால் அடிக்காமலேயே அழுவான், அவன் யார்?
7. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
8. ஆயிரம் அறைகள் கொண்ட பிரம்மாண்டமான மிட்டாய் கடை, அது என்ன?
9. அடித்தாலும் உதைத்தாலும் அழ மாட்டான், அவன் யார்?
10. மாமா போட்ட பந்தல் மறுபடி பிரிச்சா கந்தல், அது என்ன?

சூரியா இராசகுருசாமி
இடைநிலை குறிஞ்சி

விடைகள்: 1.கத்திரிக்கோல் 2.சூரியன் 3.செருப்பு 4.பெயர் 5.தொலைபேசி 6.பனிக்கட்டி 7.வாழைப்பூ 8.தேன்கூடு 9.பந்து 10.சிலந்தி வலை

## விடுகதைகள் - இடைநிலை - குறிஞ்சி

1. இரவும் பகலும் ஓய்வு இல்லை. படுத்தால் எழுப்ப ஆள் இல்லை. அவன் யார் ?
2. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நியாயம் சொல்கிறார். அவர் யார்?
3. உலகமெங்கும் படுக்கை விரித்து உறங்க முடியாமல் அலைகின்றாள். அவள் யார்?
4. கனத்த பெட்டிக்காரன், இவனது கதவைத் திறந்தால் மூட முடியாது. அது என்ன ?
5. உருவத்தில் சிறியவன், ஆனால் உழைப்பில் பெரியவன். அவன் யார்?
6. இலை உண்டு கிளை இல்லை. பூ உண்டு மணம் இல்லை. காய் உண்டு விதை இல்லை. பட்டை உண்டு சட்டை இல்லை. கன்று உண்டு பசு இல்லை. அது என்ன?
7. நாக்கு இல்லாதவன். ஆனால் நல்லதையும் கெட்டதையும் எடுத்துரைப்பவன். அவன் யார்?
8. தாழ்ப்பாள் இல்லாத கதவு. தானாக இயங்கும் கதவு. அது என்ன ?
9. சிதறிக்கிடக்கும் புள்ளிகள், சித்திரம் வரைய ஆள் இல்லை. அது என்ன?
10. முதல் எழுத்து தமிழின் இரண்டாம் எழுத்து. கடைசி மூன்று எழுத்துக்களைச் சேர்த்தால் ஒரு எண்ணிக்கை. மொத்தத்தில் இது வருமுன் எச்சரிக்கை தேவை.

- இதயம்
- தராசு
- காற்று
- தேங்காய்
- எறும்பு
- வாழை மரம்
- புத்தகம்
- கண் இமை
- நட்சத்திரங்கள்
- ஆபத்து

## நெகிழி

"Plastic" என்பதே தமிழில் நெகிழி எனப்படுகின்றது. நெகிழி என்பது ஏதாவது ஒரு நிலையில் இளகிய நிலையில் இருந்து பின்னர் இறுகிய நிலையை அடைவதைக் குறிக்கும் சொல்லாகும்.

நெகிழி வகை:
வெப்பத்தால் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நெகிழிகளில் இரு பிரிவுகள் உண்டு
(i) இளகும் வகை
(ii) இறுகும் வகை

நெகிழி பயனகள்:
1. நெகிழிப் பொருள்களின் விலை மிகவும் மலிவாக இருத்தல்
2. அனைவரையும் கவரும் பல வகை நிறங்கள்
3. உடையாமல் இருத்தல்
4. எடையின்றி இலேசாக இருத்தல்

நெகிழிப்பொருட்களைக் கண்ட இடங்களில் கொட்டாமல் தவிர்த்து, சேகரித்து மறுபயன்பாடு செய்யவேண்டும்! அதுவே நன்று!

-பாவேஷ் நிபன் - நிலை 6 - மருதம்

## உணவு வீணாவதை தடுக்கும் திட்டம்

**லோகித் சரண் மகேந்திரன் - நிலை 6 - அல்லி**

நம்மில் பலர் தங்கள் தேவைக்கு அதிகமான உணவுப்பொருட்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளை வாங்குவதை வாடிக்கையாக வைத்துள்ளோம். இதனால் உணவுப் பொருள் மீதமாகவோ அல்லது கெட்டுப்போகவோ வாய்ப்புள்ளது. இதனால் அந்த உணவு மற்றவர்களுக்குக் கிடைக்காமல் போக வழிவகுக்கிறது.

உணவு மற்றும் உணவு சார்ந்த பொருட்களை வீணடிப்பது நாம் நமது இயற்கை வளங்களை வீணடிப்பதாகும். இது பருவநிலை மாற்றத்திற்கும் வழி வகுக்கிறது, நாள் தோறும் பசியால் பலர் அவதிப்படுகிறார்கள். நாம் கீழ்கண்ட முயற்ச்சிகளை மேற்கொண்டு உணவு வீணாவதை தடுப்போம்.

1. தேவையான உணவு, உணவுப்பொருட்கள், காய்கறிகள் மற்றும் பழவகைகளை வாங்குவோம்.
2. உணவைப் புத்திசாலித்தனமாக சேமிப்போம். அதாவது விரைவில் கெட்டுப் போகக்கூடிய, காலாவதியாகக் கூடிய பொருட்களை முதலில் உபயோகிப்போம்.
3. உணவுக் கழிவுகளை குப்பையில் எறிவதற்கு பதிலாக அவற்றை உரமாக்குவோம்.
4. குறைவாக நீரை பயன் படுத்துவோம்.
5. உணவை பகிர்ந்து உண்போம் மற்றும் அளவுக்கு அதிகமான உணவை மற்றவர்களுக்கு தாணமாகக் கொடுப்போம்.
6. முடிந்தவரை வீட்டில் சமைத்து உண்போம்.
7. அதிகமாக உணவை சமைத்து அதை பதப்படுத்தி உண்போம், இதனால் உணவுப் பொருட்கள், எரிவாயு, நேரம் மற்றும் தண்ணீர் ஆகியவற்றை சேமிப்போம்.
8. விருந்துகள் மற்றும் கூட்டங்களின் போது, முடிந்தவரை உணவை வீணாக்குவதை கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டும். நிகழ்வுகளுக்கு பிறகு உணவை குப்பையில் போடப் படுவதைப் பார்ப்பது மிகவும் வருத்தமாக இருக்கிறது. நம் பள்ளி நிகழ்வுகளில் இதை ஒரு குறிக்கோளாக வைத்து முதன்மைப்படுத்துவோம்!

## தமிழ்ப் பள்ளியின் தளவாடக் குழுவில் ஒருவரான திரு. கமல் சீனிவாசன் அவர்களுடன் ஒரு நேர்காணல்:



**கேள்வி:** உங்களைப் பற்றி சொல்லுங்கள்? உங்களுடைய சொந்த ஊர் எது? எங்கு படித்தீர்கள்?

**பதில்:** என் பெயர் கமல் சீனிவாசன். பிறந்த ஊர் கும்பகோணம் பக்கத்தில் உள்ள மேலக்காவேரி என்ற சிறிய ஊர். பத்தாம் வகுப்பு வரை நான் கும்பகோணத்தில் தான் படித்தேன். பின்னர் சென்னையில் மேற்படிப்பும், என்னுடைய கல்லூரி படிப்பையும் முடித்துவிட்டு 2013-ல் என் குடும்பத்துடன், என் மகனுடன் நாங்கள் அமெரிக்காவிற்கு குடி பெயர்ந்தோம். அன்றிலிருந்து இன்று வரை நாங்கள் விர்ஜினியா மாநிலத்தில் தான் வசித்துக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:** புதிய வி.டி.ஏ. பெற்றோருக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:** இது வி.டி.ஏ. பெற்றோர்களுக்கு மட்டும் இல்ல, எல்லாப் பெற்றோர்களுக்குமே. உங்களுடைய தாய் மொழியை உங்கள் வீட்டில் பேசிப் பழகிக் கொண்டிருந்தால் அந்த மொழியை உங்கள் குழந்தைகளும் கற்றுக் கொள்ளும். அது மிகவும் அவசியம். நிச்சயமாக நாம் இப்பொழுது இருப்பது வேறு நாடு. நாம் இந்தியாவில் பிறந்தோம். இப்பொழுது நாம் இங்கு இருக்கிறோம், வளர்கிறோம், இங்க நாம நம்மளோட குழந்தைகளுக்கு நம்மளோட பாரம்பரியம், நம்மளோட மொழி, நம்மளோட கலாச்சாரங்களை கற்றுக் கொடுப்பது மிகவும் அவசியம். அது குழந்தைகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். உங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். ஏன் என்றால் அவர்களுடைய பாட்டி, தாத்தா வரும்பொழுது அவர்களுடன் பேசுவதற்கு உபயோகமாக இருக்கும்.

**இதன் காணொளியைப் பார்க்க:**

**கேள்வி:** எவ்வளவு காலமாக வி.டி.ஏ. வில் இருக்கீறீர்கள்?

**பதில்:** எனது மகன் விஷால் 2015 இல் - வள்ளுவன் தமிழ் பள்ளியில் தமிழ் பயில ஆரம்பித்தான். அன்றிலிருந்து இன்று வரை ஏதாவது ஒரு வகையில் வள்ளுவன் தமிழ் பள்ளியில் ஒரு தொடர்புடன் இருக்கிறேன். என் மகன் மூன்று வருடங்களுக்கு முன்பு தமிழ் பள்ளிப் படிப்பை முடித்து விட்டான். ஆனாலும் இந்தப் பள்ளியின் மேல் உள்ள பற்றால் பாசத்தால் குழந்தைகளின் மேல் உள்ள அன்பால் இன்னும் இந்த பள்ளியுடன் தொடர்பு கொண்டிருக்கிறேன்.

**கேள்வி:** உங்கள் குடும்பம், அன்றாட வாழ்க்கை மற்றும் இந்த பள்ளியை எவ்வாறு சமப்படுத்துகிறீர்கள்?

பதில்: நமது தமிழ் பள்ளிக்கு வாரம் அதிகபட்சம் இரண்டு மணி நேரம் தான் செலவு செய்கிறோம். அதனால் அது ஒரு பெரிய விஷயமாக எனக்கு தோன்றவில்லை.

**கேள்வி:** புதிதாக குழுவில் சேர்பவருக்கு உங்கள் ஆலோசனை என்ன?

**பதில்:** எந்த குழுவாக இருந்தாலும் உங்களுக்கு என்ன பிடிக்கும் என்று பாருங்கள். எனக்கு இந்த தளவாடக் குழுவில் பணியாற்றுவது ரொம்ப பிடிக்கும். அதே போல் கலாச்சார நிகழ்ச்சிகள் நடக்கும் பொழுது அதில் பங்கு பெறுவது மிக மிக பிடிக்கும். குழந்தைகள் நடனம் ஆடுவது, பாடுவது, அவர்களுக்கான போட்டிகள் எல்லாவற்றிலும் உதவி செய்வது என்பது எனக்கு பிடித்த விஷயம். நிச்சயமாக எல்லோராலும் பங்கேற்று பங்களிப்பு அளிக்க முடியும். நம்மை மாதிரி நம் குழந்தைகளும் நம்மைப் பார்த்து இங்கு மட்டும் இல்லாமல் எந்த தமிழ் பள்ளியாக இருந்தாலும் அவர்கள் ஒரு சமூக பொறுப்புடன் செயல்படுவார்கள். அதற்கு நாம் முதலில் ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.

**கேள்வி:** உங்கள் குழந்தை பட்டம் பெற்ற பிறகும், எப்படி உங்கள் பயணம் வி.டி.ஏ. வில் தொடர்கிறது?

**பதில்:** என் பையன் மூன்று வருடத்துக்கு முன்னால் படித்து முடித்து விட்டான். கொரோனா சமயத்தில் என் மகன் உதவி ஆசிரியராக இருந்தான். இந்தக் குழந்தைகளை பார்க்கும் போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், மன திருப்தியாகவும் இருக்கும்.

*- தொகுத்து வழங்கியவர்: செல்வி ஸ்ரீநிகா பிரிட்டோ & செல்வி சுபர்ணா தேவ்ராஜ் (நிலை 5 – அல்லி மாணவிகள்)*

---

## பெற்றோர்களுடன் ஒரு நேர்காணல்:

**இதன் காணொளியைப் பார்க்க:**

**திருமதி சிராஜுல்ஹுதா சாதிக் பாஷா:** வணக்கம், என் பெயர் சிராஜ் முல்லா சாதிக் பாஷா. எனது மகன் பெயர் முஹம்மது ஷாரிக். வள்ளுவன் தமிழ் பள்ளியில் நிலை 3 மருதம் வகுப்பில் படிக்கிறான். இங்கு கடந்த வருடம் நாங்கள் இணைந்தோம். இங்கு இணைந்த பிறகு என் மகனுடைய வாசிப்புத் திறன் அதிகமானதை நாங்கள் கண்கூடாகப் பார்த்தோம். அதற்குப் பிறகு இங்கு நிறைய போட்டிகள் நடத்துகிறார்கள். அதில் பங்கேற்க, பங்கேற்க அவனது ஆர்வம் அதிகமானது. அதனால் அவன் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டான். தமிழர்களுடைய அறிவு, அவர்களது நாகரிகம், பண்பாடு இதையெல்லாம் கற்றுக் கொண்டு அவனுடைய அறிவு மேம்பட்டது. வாய்ப்பளித்த தமிழ் மையத்திற்கு மிக்க நன்றி!!


**திருமதி பத்மா மணிகண்டன்:** வணக்கம், என் பெயர் பத்மா. எனது குழந்தைகள் மோகித், நவ்யா, இந்த வருடம் தமிழ் பள்ளியில் சேர்ந்து இருக்கிறார்கள். மோகித் நிலை இரண்டிலும், நவ்யா மழலையிலும் சேர்ந்து இருக்கிறார்கள். இங்கு சேர்ந்ததிலிருந்து அவர்களது தமிழ் வளர்ச்சி ரொம்ப நன்றாக இருக்கிறது. இப்பொழுது மோகித் நிலை இரண்டில் ஓரளவுக்கு படிக்கவும் செய்கிறான். இங்கு சேர்ந்த பிறகு அவர்களது தமிழ் ஆர்வம் நன்றாக அதிகரித்து இருக்கிறது. இங்கு நிறைய போட்டிகள் இருப்பதால் அவர்கள் தமிழ் அறிவை இன்னும் வளர்த்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கிறது. மொத்தத்தில் ரொம்பவும் திருப்திகரமாக இருக்கிறது. இதை நாங்கள் இன்னும் தொடர்வோம். தமிழ் மொழியோடு ரொம்ப தொடர்பில் இருக்க வேண்டும் என்று நாங்கள் ரொம்ப ஆசைப்படுகிறோம். நன்றி!!

குறிப்பு: சனவரி **2023** செய்தி மடலின் பெற்றோர்களின் காணொளியைப் பார்க்க:

---

## மாணவர்களின் படைப்புகள்

### சர்வேஷ் ஆதவ் (இடைநிலை குறிஞ்சி)



**இடமிருந்து வலம்**

1) கோவில்களில் ஜபிப்பது (5)
3) இதில் கடலில் பயணம் செய்யலாம் (4)
10) இது சிறுத்தாலும் காரம் குறையாது (3)
12) அம்பிகை வேறு பெயர் (4)
14) பார்க்க உதவும் உறுப்பு (2)
15) எடையை குறிக்கும் ஆங்கில சொல் (2)
16) சலங்கையை கால் ________ ல் கட்டுவர் (3)
17) __________ படிக்கட்டு அல்லது ______ வீடு (2)
19) நிலவு வேறு சொல் (5)
20) சீதையின் கணவன் (3)
9) வெடி _______ டுமீல் என்று வெடிக்கும் (3)
11) ________ படிப்பவன் அந்தணன் (3)
18) கோழி ஒரு இனம் (3)
5) இரு நட்டால் மழை வரும் (3)

**வலமிருந்து இடம்**

8) இறைவனிடம் தவம் செய்து கிடைப்பது (3)

**மேலிருந்து கீழ்**

13) மூவேந்தர்களில் ஒருவர் (5)
1) ரதியின் கணவன், அம்பு விடுபவர் (5)
2) ஆகஸ்ட் 15 ல் சுதந்திர _______ கொண்டாடுவர் (3)
3) கை வேறு சொல் (3)
8) பாதை வேறு சொல் (2)
14) தமிழ் ராமாயணத்தை எழுதியவர் (4)

**கீழிலிருந்து மேல்**

17) கன்னி _____ டம் (2)
16) பாடல் வேறு பெயர் (3)
11) கபடம் போடுபவர் (3)
6) தண்ணீர் எடுக்க உதவுவது (3)
4) முருகன் கையில் வைப்பது (2)
7) கிரிக்கெட்டில் _____ எடுப்பவர்கள் (2)

## அழிந்து வரும் விவசாயம்

**ஆராதனா அருண் – நிலை 5 முல்லை**

**முன்னுரை:**

விவசாயம் என்பது உணவுக்காகவும், பிற தேவைகளுக்காகவும் பயிர்களை உற்பத்தி செய்வதாகும்.

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்" – என்று கூறுகிறது திருக்குறள்.

எனவே தான் இந்தியாவின் முதுகு எலும்பு விவசாயம் என்று காந்தியடிகள் கூறினார்.

**பண்டைய விவசாயம் :**

பண்டைய விவசாயம் இயற்கையால் ஆனது. ஒரு யானை படுத்து இருந்த இடத்தில் ஏழு யானைகளுக்கு உணவு கொடுக்கும் விளைச்சலைப் பெற்றது நம் தமிழகம். இதனை

" ஒரு பிடி படியும் சீறிடம்
எழு களிறு புரக்கும் நாடு – கிழவோயே" – என்று கூறுகிறது புறநானூறு.

**இன்றைய விவசாயம்:**

- இன்று மக்கள் தொகை பெருகியதால், மரங்களை வெட்டி வீழ்த்தி, விவசாய நிலங்களை கட்டிடங்களாக மாற்றி விட்டனர்.
- சுற்றுச்சூழல் மாசு கேட்டினால் மழை குறைந்து விவசாயம் நலிந்து விட்டது.
- இந்த தலைமுறையினருக்கு விவசாயத்தின் மீது உள்ள ஆர்வம் குறைந்து விட்டது.

**எதிர்கால தீர்வு:**

- பள்ளிகளில் விவசாயத்தை ஒரு பாடமாக போதித்து மாணவர்களுக்கு விவசாயத்தை ஊக்கப் படுத்துவோம்.
- வீட்டுக்கு ஒரு தோட்டம் வைத்து வளர்ப்போம்.
- அதிக செலவு செய்யாமல், குறைந்த நீர்ப் பாசனத்தில், குறைந்த மின்சாரத்தில் , நாட்டுக் கால்நடைகளையும் பயன்படுத்தி விவசாயம் செய்வோம்.
- தமிழகத்திற்கு மட்டும் அல்ல, இந்த உலகிற்கே இயற்கை விவசாயம் மட்டும் தான் எதிர்காலம். பாரம்பரிய முறைகள் மூலம் நிலத்தைப் பாதுகாப்போம்.


**முடிவுரை:**

நம் அடிப்படைத் தேவையான உணவு, உறைவிடம், உடை மூன்றையும் விவசாயம் தான் நமக்கு தருகிறது.

" உண்ணக் காய்கனி தந்திடுவீரே
உழுது நன்செய் பயிரிடுவேரே,
எண்ணெய், பால், நெய் கொணர்ந்திடுவீரே " –

என்ற மகாகவி பாரதியாரின் கூற்றுக்கேற்ப விவசாயத்தைப் போற்றுவோம், விவசாயிகளைப் போற்றுவோம்.

**நன்றி:** ஆராய்ச்சி உதவிக்கான ஆதாரங்கள் - இணையம்.




**இலக்கியத் தலைவர்கள் தொடர் - 2**

### யார் தெரியுமா?

பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை ஆகிய சங்கத்தமிழ் நூல்களின் பாட்டுடைத்தலைவன்; புறநானூறு, பழமொழி நானூறு, சிலப்பதிகாரம் உள்ளிட்ட பல பழந்தமிழ் நூல்களில் பெரும் எண்ணிக்கையில் பாடப்பட்டவன்; தனது வீரத்தால் பல நாடுகளை வென்று சோழ நாட்டை விரிவு படுத்தி பெரும் புகழ் பெற்ற சோழ மன்னன் யார் தெரியுமா? அவன்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நீர் மேலாண்மையில் சிறந்து விளங்கி, உயர்ந்த தொழில்நுட்பத்துடன் இன்றும் உலகே வியக்கும் வண்ணம் பயன்பாட்டில் உள்ள கல்லணையைக் கட்டிய சோழன் கரிகால் பெருவளத்தான்.

சோழன் கரிகால் பெருவளத்தான் என்ற கரிகாலனைப் பற்றி பல்வேறு குறிப்புகள் பழந்தமிழ் நூல்களில் நமக்குக் கிடைக்கின்றன. மிகச் சிறு வயதிலேயே பகைவர்களால் சிறைப்படுத்தப்பட்டும் மனந்தளராமல் சிறையிலேயே போர்க்கலைகளைக் கற்று, இளைஞனான பின், சிறைக் காவலர்களைத் தாக்கி, சிறைக்கு தீயிட்டு விட்டு தப்பினான். அப்போது காலில் தீக்காயம் ஏற்பட்டதால் கரிகாலன் என்று வழங்கப்பட்டான்.

பின்னர் அரசனானதும் தன் ஒப்பில்லா வீரத்தால் பல போர்களில் வென்று சிறிய நாடாக இருந்த சோழ நாட்டை மிகப்பெரும் நாடாக விரிவு படுத்தினான். வெண்ணி என்னுமிடத்தில் நடந்த போரில் சேர மன்னன் பெருஞ்சேரலாதனையும், அவனுக்குத் துணைவந்த பாண்டியன் மற்றும் பதினோரு குறுநில மன்னர்களையும் வென்றான். வெண்ணியில் இவனை எதிர்த்துப் போரிட்டபோது முதுகில் புண்பட்டது என்று நாணிச் சேரமான் பெருஞ்சேரலாதன் போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர் துறந்தான். கரிகாலன் இமயம் வரை படையெடுத்துச் சென்று இடையில் இருந்த நாடுகளையெல்லாம் எவ்வாறு வென்றான் என்று பட்டினப்பாலை மிக விரிவாக விளக்குகிறது.

கரிகாலன் அவைக்கு நீதி கேட்டு வந்த முதியவர்கள் இருவர் இந்த இளைஞன் சரியாக ஆராய்ந்து தீர்ப்பு சொல்வானா என்று ஐயமுற, இவன் தானும் முதியவன் போல் நரை முடி தரித்து தீர்ப்பு சொன்னான் என்ற செய்தியை "நரை முடித்து சொல்லாலே முறை செய்தான் சோழன்" என்னும் பழமொழி நானூறு பாடலின் மூலம் அறிகிறோம். இவ்வாறாக இளம் வயதிலேயே ஈடு இணையில்லா வீரமும், நடுநிலை தவறாது நீதி வழங்கும் அறமும், கூர்மையான தொழில்நுட்ப அறிவும் கொண்டு காலத்தை வென்று நிற்கும் கரிகாலனைப் போற்றுவோம்!! நாமும் அவன் போல் சிறப்புற வாழ்வோம்!!

**– திரு. பா. வேல்ராஜ் - நிலை 7 முல**

**ஆசிரியர்.**

**தெரிந்து கொள்வோம்:**

- விண்வெளி வீரர்களால் விண்வெளியில் கண்ணீர் சிந்த முடியாது.
- இறாலின் இதயம் அதன் தலையில் உள்ளது.

- செல்வி யாஷிகா கணேஷ் நிலை 5 – குவளை

**உங்களுக்கு தெரியுமா...?**

- காந்தியடிகளால் தான் சுபாஷ் சந்திரபோஸ்க்கு "நேதாஜி" என்ற பட்டம் கொடுக்கப்பட்டது.
- முதல் பத்மஸ்ரீ விருது பெற்றவர் அன்னை தெரசா.
- சோழர் காலத்தில் தமிழ்நாடு தான் உலகத்திலேயே மிகவும் பணக்கார நாடு. சுமார் 40,000 கோவில்களை சோழர்கள் கட்டினார்கள். அன்று உலகிலேயே உயர்ந்த கட்டிடம் தஞ்சை பெரிய கோவில் தான்.
- உலகிலேயே அதிக அளவில் முட்டையிடும் உயிரினம் கரையான்.
- காண்டாமிருகத்தின் கொம்பு எதனால் ஆனது - உரோமக் கற்றைகள்.
- கழுகுகள் இறக்கைகளை அசைக்காமல் தொடர்ந்து பறக்கும் தூரம் 6 கிலோ மீட்டர்.
- மிக வேகமாக ஓடும் பூச்சி கரப்பான் பூச்சி.
- பச்சோந்தியின் நாக்கு அதன் உடலின் நீளத்தை விட 2 மடங்கு அதிகமாக இருக்கும்.

***- பதிப்பாசிரியர்கள்: விஜயலக்ஷ்மி ராமநாதன், மது பிரிட்டோ & திலகம் தீபன்***